**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 202/2013**
**வழக்கு சாட்சி. அ.சா.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ஜனகி | **வயது** | : | 44 /2026 |
| **கணவர் பெயர்** | : | நாகராஜன் | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | வள்ளம்பக்காடு | **தொழில்** | : | |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**A1 to A4 and A6 absent. Petition filed. A7 present. Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**<u>தேதி : 02.03.2026</u>**

**சாட்சியானவர் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:**

1. எதிரிகள் எங்களை தாக்கியதாக அதே நாளில் எதிரிகளும் எங்கள் மீது வழக்கு கொடுத்தார்கள் என்றால், ஞாபகம் இல்லை. எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் வழக்கானது நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது என்றால், "சரிதான்". அவ்வழக்கில் நானும் ஒரு எதிரி ஆவேன். இரண்டாம் 2ஆம் எதிரி லட்சுமி எனது மாமியார் என்றால், உறவுமுறை ஆவார். குப்புசாமி என்பவர் லட்சுமியின் மகன் என்றால், சரிதான். லட்சுமியும் அவரது மகனும் சேர்ந்து புதுக்கோட்டையில் எங்களது மீது சொத்து சம்பந்தமாக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால், தெரியாது. அந்த வழக்கினை தாக்கல் செய்ததன் காரணமாக எங்கள் குடும்பத்தாருக்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் முன்விரோதம் கொண்டுள்ளோம் என்றால், இல்லை. பைப் போடுவது சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிஸ்சார் என்னை விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள்.

2. போலிஸ்சார் என்னை விசாரணை செய்த போது முதல் விசாரணையின் சாட்சியத்தில் சொல்லியுள்ள அந்த விவரங்களை தான் தெரிவித்தேனா என்றால், ஆமாம். நான் எனது முதல் விசாரணையின் சாட்சியத்தில் இந்த வழக்கின் எதிரியான வெள்ளைச்சாமி என்பவர் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் எனது வலது முன்கையின் கீழே வெட்டி காயப்படுத்தினார் என்று சொல்லியுள்ளேன் என்றால், ஆமாம். அந்த விவரத்தினை நாகுடி போலிஸ் நிலையத்தில் இந்த வழக்கு (STC 475/2017) சம்பந்தமாக என்னை விசாரணை செய்த போது சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். மேற்படி STC 475/2017 வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால், சரிதான்.

3. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளவாறு இவ்வழக்கு சம்பவங்கள் ஏதும் நடைபெறவில்லை எனவும், இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று எங்கள் தரப்பினர் தான் எதிரிகள் தரப்பினரை தாக்கி காயங்களை ஏற்படுத்தினோம் என்றும், அந்த சம்பவம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க கோரி எதிரிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட புகாரில் வழக்கு ஏதும் பதிவு செய்யப்பட்டால் அந்த வழக்கில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும் என்ற முன் எச்சரிக்கை நோக்கத்தில் எனது தரப்பினரின் ஆலோசனையின் படி இந்த வழக்கிற்கான புகாரினை நான் பொய்யாக கொடுத்துள்ளேன் என்றும், அவ்வாறு கொடுக்கப்பட்ட புகாரின் மீது பதிவுசெய்யப்பட்ட வழக்கினை எனது பொய்யான புகாரினை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**